விலை: சதம் 75


**வீடியோ படப்பிடிப்பு**

திருமண வைபவங்களையும் மங்கள வைபவங்களையும் காலமெல்லாம் பார்த்து மகிழ்ந்திடும் வகையில்

**வீடியோ கமரா**

மூலம் படம்பிடித்து கொடுப்பவர்கள்

**S. சுலைமான் கண்டு அன் பிறதர்**

5-7 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
போன்; 265


# ஈழநாடு
## THE EELANADU


மலர் 23 ஆவணி 18 துல்ஹஃ 3 இதழ் 201
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 3-9-1981



**நியூ கேம்பிறிட்ஜ்**

திருநெல்வேலிச் சந்தி
**புதிய வகுப்புகள்**

- Short Hand and Typing
- Book Keeping
- Radio and Electronic
- Tele Communication (lond exam)

A/L 82/83

கணக்கியல்:- பாலா
பொருளியல்:- குமாரவேல்
வர்த்தகம்:- திலகரத்தினம்
அளவையியல்:- சிவம்

**ஆரம்பம்: 5-9-1981 காலை7-00**


# நாடு முழுவதும் ஊர்காவல் குழு
## உடனடியாக ஆரம்பிக்க அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

**நாடுமுழுவதிலும் ஊர்காவல் குழுக்களை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக்குழுக்களில் சகல சமூகங்களையும் சேர்ந்த மக்கள் அங்கம் வகிப்பார்கள். மலையகத்தில் ஊர்காவல் குழுக்களை அமைக்க ஏற்கனவே அரசு அங்கீகாரம் வழங்கிவிட்டது.**

அமைச்சரவையின் வாராந்தக் கூட்டம் நேற்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரவைக் கூட்டத்தில் நாடு முழுவதிலும் அமைக்கப் படவிருக்கும் ஊர்காவல் குழுக்கள் பற்றி விரிவாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் சிபாரிசின் பேரிலேயே ஊர் காவல் குழுக்கள் அமைக்கப்படுகின்றன என்றும் முக்கியமாக அமைதியைப் பாதுகாப்பதில் இக்குழுக்கள் முழுக்கவனம் செலுத்தும் என்றும் தெரிவிக்கப்பட்டது

இக்குழுக்களில் சகல சமூகங்களையும் சேர்ந்தவர்கள் அங்கம் வகிப்பார்கள் என்றும், பொலிஸாருடன் இணைந்து இக்குழுக்கள் செயல்படும் என்றும் தெரியவருகிறது.

இக்குழுக்கள் மலையகத்தில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன,

### தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.

யாழ். மாநகர சபை நஷ்டஈட்டு வழக்கில்

# மறுமொழி அணைக்குமாறு சட்ட மாஅதிபருக்கு ஆணை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகர சபையால் சட்ட மா அதிபருக்கெதிராக நஷ்ட ஈடு கோரி தாக்கல் செய்த வழக்கில் சட்ட மா அதிபர் அக்டோபர் 5ம் திகதி அன்றோ அதற்கு முன்னரோ மறுமொழி அணைக்க வேண்டுமென யாழ். மாவட்ட நீதிமன்றத்தால் கட்டளை இடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடந்த கலவர சம்பவத்தின்போது சேதமடைந்த யாழ் பொது சனநூல் நிலையம் மற்றும் யாழ். மாநகரசபையின் சந்தை கட்டிடங்களுக்கு 1,26,36,000 ரூபா அரசின் பிரதி நிதியான சட்ட மா அதிபரிடமிருந்து நஷ்டஈடு கோரி யாழ். மாநகர சபை சென்ற திங்கட்கிழமை யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

யாழ். மாநகர சபைக்காக இவ்வழக்கை சட்டத்தரணி த சோமசுந்தரம் தாக்கல் செய்திருந்தார். (மா)

# விக்கிரமசிங்கா பூதவுடல் இன்று கொழும்பு வருகிறது
## ஞாயிற்றுக்கிழமை இறுதிச் சடங்கு

[கொழும்பு]

மாஸ்கோவில் காலமான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ஏ. விக்கிரமசிங்காவின் இறுதிச் சடங்குகள், ஞாயிற்றுக்கிழமை மாதம்பையில் நடைபெறும் என்று கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை அலுவலகம் அறிவித்துள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்டது போல் இவரின் இறுதிச்சடங்குகள் திங்கட்கிழமை நடைபெற மாட்டாது.

மாஸ்கோவிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை இன்று வியாழக்கிழமை வந்தடையும் இவரின் பூதவுடல் பொறளையிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி தலைமை அலுவலகத்தில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

**யாழ்ப்பாணத்தில் அஞ்சலி**

டாக்டர் விக்கிரமசிங்காவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் கிளை அலுவலகத்தில் அனுதாபப்புத்தகம் ஒன்று வைக்கப்பட்டுள்ளது நேற்று வைக்கப்பட்ட இந்த அனுதாபப் புத்தகத்தில் ஏராளமானவர்கள் நேற்று கையெழுத்திட்டனர். நேற்று மாலை யாழ் நகரமேயர் திரு. இராசா விசுவநாதன் யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு, சு வித்தியானந்தன் ஆகியோர் கையெழுத்திட்டனர், அனுதாப புத்தகம், சனிக்கிழமைவரை கட்சி அலுவலகத்தில்வைக்கப்பட்டிருக்கும்.

**நேரில் அஞ்சலி**

மறைந்த தலைவர் டாக்டர் விக்கிரமசிங்காவுக்கு அஞ்சலி செலுத்தும் பொருட்டு ஏராளமான கட்சித் தோழர்கள் யாழ். மாவட்டக் கமிட்டித் தலைவர் தலைமையில் கொழும்பு செல்கின்றனர். இவர்கள் இறுதிச் சடங்குகளிலும் கலந்து கொள்வார்கள்.

யாழ். மாவட்டத்திற்கு

# 1250 மெ. தொன் விதை கிழங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்துக்கு 1250 மெற்றிக் தொன் விதை உருளைக்கிழங்கு விநியோகம் செய்யப்படவுள்ளது. விவசாய ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர் திரு. ரஞ்சன் விஜயரத்தன இத்தகவலை தெரிவித்துள்ளார்,

யாழ்.பிரதி செயலாளர் திரு எம் பஞ்சலிங்கம், விதை உருளைக்கிழங்கு வழங்குவது சம்பந்தமாக விவசாய அமைச்சரை ஏற்கனவே கோரியிருந்தார்.

வெளிமடை விதை கிழங்கு 75 வீதமும் டிசறி இன விதை கிழங்கு 25 வீதமும் வழங்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் வழங்கப்பட்டுவந்த 'ஆக்கா' இன விதை கிழங்கு இம்முறை வழங்கப்பட மாட்டாதாம், [மா]

# கஷ்டப் பிரதேச ஆசிரியருக்கு வாய்ப்பு

[மட்டக்களப்பு]

1977ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்கு முன்னர் கஷ்டப் பிரதேச நியமனம்பெற்ற ஆசிரியர்கள், அடுத்த வருடம் ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் உட்பட சகலபாட நெறிகளுக்கும் விண்ணப்பம் செய்வதற்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு மாணவ ஆசிரியர்களிடமிருந்து இப்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

நியமனத்தன்மை, தகைமையாகக் கடந்த வருடங்கள் போன்று கேட்கப்படாமல் பாடத்தகைமைக்கேற்ப பாட நெறிகளுக்கு விண்ணப்பம் செய்யக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கஷ்டப பிரதேச நியமனம் பெற்ற ஆசிரியர்கள் சகல பாடநெறிகளுக்கும் விண்ணப்பம் செய்யக்கூடிய வாய்ப்புகளை இப்பொழுது பெற்றுள்ளனர்.


**தையல் ஆசிரியை தேவை**

விஞ்ஞான முறைப்படி (Scientific Cutting) தையல் படிப்பிப்பதற்கு ஆசிரியை தேவை. தையல் கலையில் டிப்ளோமா [Diploma] உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். றெட்பானா திட்டத்தில் இருப்பிட வசதிகள் கொடுக்கபபடும். மாதாந்த சம்பளம் ரூபா 500க்குக் குறையாது. தகைமைகளுடன் புரட்டாசி[September) 15ம் திகதிக்கு முன்பு கீழ்க் குறிக்ப்பட்ட விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

நிர்வாகஸ்தர்
**றெட்பானா - சிறீலங்கா**
விசுவமடு,
பரந்தன்

0814


# இந்திராவுக்கு யாழ் மாநகரசபை நன்றித்தீர்மானம்

[யாழ்ப்பாணம்]

இந்தியப்பிரதமர், தமிழக முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், மற்றும் சகல இந்திய அரசியல் கட்சிகளுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பில் நன்றி தெரிவித்து யாழ் மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது,

திரு. ஆ. துரைராஜசிங்கம் இத் தீர்மானத்தைப் பிரேரித்திருந்தார்.

இலங்கையில் நடந்த வன்செயல்கள் விஷயத்தில் இந்திய அரசின் கரிசனையைப்பாராட்டி இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# "நாட்டின் அபிவிருத்திக்கு மக்கள் பாடுபடவேண்டும்"
## மக்கள் வங்கிக் கிளைதிறப்பு விழாவில் யாழ். மாவட்ட அமைச்சர்

[யாழ்ப்பாணம்]

"மக்கள் வங்கிகளில் நிலையான வைப்பில் பணத்தை முதலீடுசெய்வதால் மக்களுக்கு மட்டுமல்ல நாட்டின் அபிவிருத்திக்குமே அதுபயன்படும்" என்று யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. வீஜயக்கோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையைக் குத்துவிளக்கேற்றித் திறந்துவைத்துப் பேசுகையிலேயே மாவட்ட அமைச்சர் இவ்வாறு கூறினார்.

வங்கிகள் மக்களுக்கு கடன் வழங்க எந்நேரமும் தயாராக இருக்கின்றன என்று குறிப்பிட்ட மாவட்ட அமைச்சர்.

[6-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

### தேவை

பயிற்சியாளர் (Apprentices) சடைச்சல், பிற்றிங், வேல்டிங், திருத்துதல் வேலைகட்கு தேவை. விண்ணப்பிக்கவும். இயந்திரம்ஸ், 336, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0804

---

தூப்பரவான வேப்பம் விதை தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 0811

---

மணமகள் தேவை. லண்டனில் நிரந்தர விசாவுடன் வசிக்கும் சிவில் எஞ்சினியர்-க்குத்தோதிக்க சமயம், 30 வயதுக்குட்பட்ட அக்கவுண்டன் சடைசி 3 'பாட்' பாஸ் பண்ணிய பெண் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 0826, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 0826

### சேவை

வவுனியா நகரசபை எல்லைக்குள், வீடுகட்ட, கடைகட்ட, அரிசி ஆலைபோட காணிகள் விற்பனைக்கு உண்டு. விவசாயம் செய்ய தோட்டங்கள் விற்பனைக்கும் குத்தகைக்கும் உண்டு. தொடர்புகொள்ளவும். அமைப்பாளர், ஹெல்ப் நீடி சேவிசஸ், 534, கண்டி வீதி, வவுனியா. 0824

### விற்பனைக்கு

இராசவீதிக்கு அருகில் இருவிணைக் கோவிலுக்கு முன்பாக 3¾ பரப்பு தோட்டக்காணி, கோப்பாய் அப்புளானையில் மூன்று பக்கம் மதில் கட்டப்பட்டதும் கிணற்றுடன் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: S. மகேந்திரன், பாட்ஸ் கடை, வளாகம் சந்தி, திருநெல்வேலி. 0815

---

வவுனியாவில் சாலவசதிகளுடன் கூடிய 25 ஏக்கர் காணி விற்பனைக்கு - குத்தகைக்கு உண்டு. நீர்ப்பாசனவசதி, வற்றாத கிணறும் நீர் இறைக்கும் யந்திரமும், பலன்தரு தென்னை, வாழை பிரயோசனங்களும்-அரிசி ஆலை போட, வியாபாரம் செய்ய, தச்சு தொழிற்சாலை, செங்கல் தொழிற்சாலை முதலிய முதலீடு செய்யக்கூடிய தொழில் வாய்ப்புக்களும் ஒருங்கே அமைந்த காணி. விபரங்களுக்கு: விளம்பரகாரர், 534, கண்டி வீதி, வவுனியா. 0823

---

யாழ். வண்ணார் பண்ணை வெப்பிரகாசம் வீதியில் பழைய வீடு மட்டும். விபரத்திற்கு 41, வெப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 0828

---

## ராம்சன்ஸ் பரிசுப் போட்டி முடிவுகள்

1-வது பரிசு:- **Bill No: 1939**
செல்வி சுப்பிரமணியம் லீலாவதி, கோண்டாவில்.

2-வது பரிசு:- **Bill No: 1769**
திரு. ராஜன் கதிர்காமர், வட்டுக்கோட்டை.

3-வது பரிசு:- **Bill No: 1917**
திரு. K. பஞ்சலிங்கம், வவுனியா.

'ராம்சன்ஸ்'
19, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். 0829

---

## பிஸ்கால் விற்பனை

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை, புத்தூர்.

வழக்காளி

வழக்கு இலக்கம் காசு. எ/762

சங்கரப்பிள்ளை நவரத்தினராசவேல், புத்தூர் காலஞ்சென்ற வல்லிபுரம் சுந்தரப்பிள்ளை என்பவரின் யாழ் மாவட்ட நீதிமன்றத்தில் 3395-ம் இலக்கத் தத்துவ வழக்கின் நிறைவேற்றுக்காக

மேற்சொல்லிய எதிராளியிடமிருந்து வெளிவாத்திலிபரிக்கப்பட்ட தொகைப்பணம் ரூபா 25,800/-ம் மேலும் ரூபா 15,000/-க்கும் வழக்குத் தாக்கல் செய்த திகதியாகிய 24-6-80 தொடக்கம் தீர்வைத் திகதியாகிய 15-09-80 வரைக்கும் 12% வீதவட்டியும், அதன்பின் முழுத்தொகையையும் இறுக்குவரை சட்டவட்டியும், வழக்குச்செலவாக ரூபா 1446/74 சதமும் எதிராளி கொடுக்கத் தவறிப்போன காரணத்தினால் இதன்பின் அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனத்தின் சகல உரித்துக்களையும் 1981-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24-ந் திகதி காலை 10-00 மணிக்குச் சொல்லப்பட்ட ஆதனத்தில் நின்று யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிஸ்காலால் விற்பனை செய்யப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன்.

(இத்துடன்பிஸ்கால் செலவும் பவுண்டேக்கும் எதிராளியிடமிருந்து அறவிடப்படும்)

விற்பனை செய்யப்படும் ஆதன டாப்பு

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோவிற்பற்று சிறுப்பிட்டி இறை முருகைப்புலம் நில. பர. (66 அறுபத்தாறும் கிணறும் தென்னைகளும் எல்லை கிழக்கு அம்பலம் விஞ்சித்தம்பி வெங்கும் உரிமைக்காரரினுதனம். வடக்கும் மேற்கும் சின்னத்தம்பி பெண் தங்கப்பிள்ளையினுதனம், தெற்கு றோட்டு. இதில் சொரியனாய் (1/8) எட்டிலொன்றும் கிணற்றுக்குக் கிழக்கே உள்ள ஒரு தென்னை நிரந்தமாகவும் (முருகைப்புலம் நில. பர. 66 என கே 145/233ல் பதியப்பட்டதும் 'முகைப்புலம்' பர 66 என கே 59/24ல் பதியப்பட்டதும் ஒரே காணி)

தா. குலஞானம்,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

0818

---

# "வன்னியகுலசிங்கம் கடும் காயங்களுடன் விழுந்து கிடந்தார்"

## ப. நோ. கூ. சங்கமுகாமையாளர் வழக்கில் சாட்சியம்

(சாவகச்சேரி)

"இயற்றுலைச் சங்கக்கடையிலிருந்து எனது வேலைகளை முடித்துக்கொண்டு நாவற்காட்டிலுள்ள எனது வீட்டிற்கு வரும்போது காலஞ்சென்ற வன்னியகுலசிங்கம் ஒழுங்கை பாதை ஓரத்தில் கடும் காயங்களோடு விழுந்து கிடந்தார். சைக்கிளில் வந்த நான் மிகவும் வேகமாகச் சென்று அவரது மனைவிக்குத் தெரிவிப்பதற்காகச் சென்றேன். அங்கே அவரது மனைவி இல்லை. பின்னர் அவரது சகோதரன் முறையான சின்னத்துரை அறிவிக்க அவர் உடனே கார் ஒன்று பிடித்து குறித்த இடத்திற்குச் சென்று அவரையாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம்" மறுநாள் வைத்தியசாலையில் அவர் இறந்துவிட்டார்.

நாவற்காடு வரணியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் வன்னியகுலசிங்கம் கொலை வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது நாவற்காடு வரணியைச் சேர்ந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர் முருகேசு சின்னத்துரை சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இக்கொலைசம்பவத்தில் சந்தேக நபர்களான சி. துரைசிங்கம், சி. பாலசிங்கம் சார்பில் சட்டத்தரணி ஸ்ரீ சிவராம சட்டத்தரணி செ. அம்பிகைபாகன், திருமதி நிமலினி அம்பிகைபாகன் ஆகியோர் ஆஜராகினர். இறந்தவர் சார்பில் சட்டத்தரணி சாகன் செல்லையா துரைராசா வழக்கை நெறிப்படுத்தினார்.

முகாமையாளர் முருகேசு சின்னத்துரை தொடர்ந்து சாட்சியமளிக்கையில் குறிப்பிட்டதாவது:-

"இறந்தவர் வீட்டுக்கும் எனது வீட்டுக்கும் ஏறக்குறைய அரைமைல் தூரம் இருக்கும். இருபாலையும் தொடக்கம் எனக்கும் காலஞ்சென்றவரைத் தெரியும். இறந்தவரின் சகோதரனும் பல நோ. கூ. சங்க விற்பனையாளராகக் கடமையாற்றுகிறார். நாங்கள் மூவரும் வேலை செய்யும் கிளைகள் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் எல்லாம் மாலை 5-30 மணிவரை திறந்திருக்கும். சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து மிருசுவில் சங்கக்கடை சுமார் 3 மைல் தூரம்வரை இருக்கும். சம்பவம் நடந்த இடத்தின் இருமருங்கும் பற்றைகள் உண்டு.

"சுமார் 20 யார் தூரத்தில் வரும்போது நான் காலஞ்சென்றவர் விழுந்து கிடந்ததைக் கண்டேன் நான் கிட்டச் செல்லும்போது அடையாளம் கண்டேன்" என்றார்.

நீதிபதி சி. வி. விக்கினேஸ்வரன் சாட்சியங்களைப் பதிவு செய்தபின் இந்த மாதம் 15-ந் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

---

## பொலிஸ்பிரிவு மூடப்பட்டது

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் இயங்கிவந்த பொலிஸ்பிரிவு மூடப்பட்டு பலவாரங்களாகின்றபோதும் அதனை மீண்டும் திறக்காமையால் பெரும் அசௌகரியங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆஸ்பத்திரி விசாரணைகள், பாதுகாப்பு என்பன இப்பிரிவு மூடப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ளதாம்.

---

## சைக்கிள் திருட்டு தொழிலாளர் பாதிப்பு

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமந்துத் தொழிற்சாலை வடக்குப்புற வாயிலில் அடிக்கடி சைக்கிள் திருட்டு இடம்பெறுவதால் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களது தொழிலாளர்களின் சைக்கிள்களே இவ்வாறு திருட்டுப் போகிறது.

கடந்த வாரத்தில் மட்டும் 5 சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளதாக காங்கேசன் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

---

## யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாசம்

'மட்டுப்படுத்தப்பட்டது'
மேல்மாடி, 25 மூன் வீதி,
யாழ்ப்பாணம்

மேற்படி சமாசத்தின் புதிய "இசுசு T x D 55" 7 தொன் லொறிக்கு உருவமைப்பதற்கு "ரெண்டர்" கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்வி பத்திர விபரங்களை சமாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரம் பதிவுத்தபாலில் கீழ்குறிப்பிட்ட விலாசத்திற்கு 14 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

தலைவர்,
யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாசம்,
25, மூன் வீதி,
மேல்மாடி,
யாழ்ப்பாணம். 0762

---

## மனைவியுடன் தகராறு நஞ்சருந்தித் தற்கொலை

(மாவிட்டபுரம்)

வீட்டின் வறுமையை எண்ணாது வீட்டிலிருந்த ஒவ்வொரு பொருட்களையும் விற்று மது அருந்துவதில் ஈடுபட்ட குடும்பஸ்தர் ஒருவர் மனைவியுடன் ஏற்பட்ட தகராறை அடுத்து நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

கீரிமலை வசந்தபுரத்தைச் சேர்ந்த நாகி வைரவன் (65 வயது) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டார்.

கூலிவேலை செய்து வந்த காலமானவருக்கு 7 பிள்ளைகள் உண்டு. குடும்பத்தில் வறுமை குடிகொண்டிருந்த போதும் அதைப்பற்றிச் சிந்திக்காது மது அருந்துவதே இவரது வேலையாக இருந்தது. மது அருந்தப் பணம் இல்லாதபோது வீட்டிலுள்ள கோடரி, மண்வெட்டி போன்ற ஒவ்வொரு பொருட்களையும் எடுத்துச்சென்று விற்றுவிட்டு மது அருந்தி வந்தார். இதன் காரணமாக குடும்பத்தில் சச்சரவு ஏற்பட்டது. மனைவியுடன் ஏற்பட்ட தர்க்கம் காரணமாக இவர் மனமுடைந்து நஞ்சருந்தி மரணமானார்.

மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம் மரணம் குறித்து நடத்திய விசாரணையின்போது மேற்கண்ட விபரங்கள் தெரியவந்தன.

முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

காங்கேசந்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

---

## உற்சவம்

[மாவிட்டபுரம்]

மாவிட்டபுரம் வீனியவரை ஐயனார் ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகியுள்ளது.

ஆவணிச் சதுர்த்தி தினத்தன்று ஆரம்பமான இந்த உற்சவம் தொடர்ந்து 10 தினங்கள் இடம்பெற்று தேர், தீர்த்த உற்சவங்களும் நிகழும்.

உற்சவ ஒழுங்குகளை ஆதீன கர்த்தர் ஆ. துரைச்சாமி ஐயர் மேற்கொண்டுள்ளார்.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB 3583

ஆறுமுகம் வயிரவநாதர் கணபதிப்பிள்ளையும் பெண் நிர்மலாதேவியும், சன்னதி றோட்டு, பத்தமேனி, அச்சுவேலி.

வழக்காளி

எதிராக

வீரகத்தி குமாரு, பாரதி வீதி, பத்தமேனி, அச்சுவேலி.

எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டின் MB 3583-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1981-ம் வருஷம் புரட்டாதி மாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல்வட்டி ரூபா 3710/- பின் 28-3-80 தொடக்கம் 29-8-80 வரைக்கும் ரூபா 2000/-க்கு 18% வீதவட்டியும் அதன் பின் முழுத்தொகையும் இறுக்கும் வரைக்கும் 5% வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 399 சதம் 40.

ஆதனவிபரம்

வடமராட்சி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி அச்சுவேலி கோவிற்பற்று பத்தமேனி இறை முத்தலட்டி நில. பர. 10 பத்துக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு கறுவல் வேலனுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம், தெற்கு வேலன் பெண் உத்தமியினுதனம், தெற்கு கறுவல் ஆசைகனுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனம் இதடங்கலிற செம்பாலாய் நல்ல ஒரு பங்கும், தெற்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் முற்றின யாழ்ப்பாணம் 280/213.

தொல்புரம்,
21-6-81.

சி. சோ. நரசிங்கம் ஜே. பி.,
நீதிமன்ற விற்பனையாளரும்,
மதிப்பாளரும்.

0827

**மணிவாக்கு**

உடலின் புல்லிய இயல்புகளுக்கு அடிமைப்பட்டிருப்பவன் உயர்ந்த வாழ்வுக்கு உதவான்.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## சமாதான முயற்சிகள்

சண்டைக்கு முடிவு சமாதானம்; ஒன்று எப்போது முடிகிறது. மற்றது எப்போது தொடங்குகிறதென்று கணிப்பது கடினம்; அதுவும் நீண்டகால நோய்போன்றதானால் அது மிகக் கடினம்.

காய்ந்த மாடு கம்பிலே விழ்வதுபோல் நாட்டின் தமிழ் மக்கள் அமைதியையும் பாதுகாப்பையும் நெருங்கி நாடுவது இயற்கை அதே சமயம் புலி பசித்தாலும் புல்லைத்தின்னுதென்பதையும் நாம் மறப்பதற்கில்லை.

'புலி' என்றால் இன்று நாட்டின் தமிழ் மக்களை ஏளனம் செய்ய உதவும் சொல்லாக வந்துவிட்டது. அறியாமையின் விளைவு இது.

'பிளேக்' [Blake] என்ற ஆங்கிலப் புலவனின் ஞானக்கவி 'புலியை'ப் பற்றியது. பெருந்த இலக்கிய ஆராய்ச்சிக்குட்பட்ட இக் கவியின் முடிவில் ஆட்டுக்குட்டியைப் படைத்த இறைவன் உன்னையும் படைத்தானா? என்ற கேள்வி இடம் பெறுகின்றது. ஆண்டவன் படைப்பில் அதற்குரிய இடம் உண்டு.

ஆட்டுக்குட்டியைப்போல மிருதுவான ஆன்மாக்கள் வதியும் அமைதிப்பிரதேசமான யாழ்ப்பாணத்தில் புலிகள் எவ்வாறு உதித்தன? இது ஒரு கேலிக்குரிய கேள்வியல்ல! இதனை ஆராய்ந்து உண்மையைக் கண்டுபிடித்தல் இன்று நாட்டில் உருப்பட்டிருக்கும் தீராத நோயைத் தீர்த்து வைக்கும்.

அது எவ்வாறாயினும் கடும் புயல் அடித்து அழித்துச் சின்னாபின்னமாகக் கிழிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு சிறு ஆறுதல் தற்காலிகமான தீர்வாயினும் தலைகாட்டுவதானால் அது விரும்பத்தக்கது.

இந்தவகையில் அரசாங்கம்-தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கிடையில் கூட்டு இணக்கம் ஏற்பட்டிருக்கும்செய்தி நன்மை நாடும் மக்கள் அனைவருக்கும் நிச்சயம் ஆறுதல் அளிக்கும்.

நீண்டகாலத் தேசியப் பிரச்னைகள் உடனடியாகக் குணமடையா. குழப்பம் ஏற்பட்டு, அதன் விளைவால் ஞானம் உயதமானால் தீர்வுகாண்பது சுலபமாகும்.

நாமெல்லோரும் இந்நாட்டு மக்கள் என்று நம்பி வாழப் பழகுவோமானால், இனப்பிரச்னைகள், இன உரிமைகள் என்ற அநாகரிக பதங்களுக்கு இடமிராது.

சுதந்திர இலங்கை உதயமாகுமுன் இவ்வித சமுக நிலை இந்நாட்டில் இருந்தது

சுதந்திரம் கிடைத்ததும் பங்குபோட்டித் தொடங்கிய போராட்டம் எங்கு முடியுமென சொல்வதற்கில்லை.

சகல மக்களும் இந்நாட்டுப் பிரஜைகளானால், அவர்களின் முன்னேற்றத்துக்கு, இன, மத, மொழி அடிப்படை வேறுபாடுகளுக்கு ஏது இடம்?

எமது மொழியில் கல்வி, நிர்வாகம்; எமது மாணவர்கள் தகைமை அடிப்படையில் உயர் கல்வி, தொழிலுரிமை; தமிழ் - சிங்களம் என்ற துவேஷமற்ற நல்வாழ்வு - இவையெல்லாம் விவேகமுடைய பொதுமக்கள் விரும்பாத பண்டங்களல்ல.

இந்த நிலைமையைக் குழப்பி அரசியல் இலாபம் பெற முற்பட்ட சக்திகள் தாமே தம்முடைய சிந்தனைகளை புனரமைத்து நாட்டைப் புதிய பாதையில் இட்டுச்செல்ல வழிகாட்டவேண்டும்; தெய்வம் இதற்கு உதவவேண்டும்.

இந்தியாவின் நேரு தமிழ் மாநிலத்தை நேரில் கண்ணுற்றபோது அங்கு நிலவிய தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தின் நிலையுற்ற அத்திபாரத்தைக் கணிக்கும் ஞானமுடையவராகையால், மாநில அரசை வழங்க முன்வந்தார். குறைகளிருந்தும் இன்று தமிழகம் பல திசைகளிலும் முன்னேறவும், மக்கள் தனித்துவ வாழ்வை நிர்ணயிக்கவும், மத்திய ஆட்சியின் பண்டைய சித்தாந்தத்தை முறியடிக்கவும் மாநில ஆட்சிக்கு அதிகாரம் இருக்கிறது.

இந்நாட்டின் நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் பயங்கரவாதநிலை பொருத்தமற்றது. இந்நிலையை வேரோடு கிள்ளிவிடத் தவறினேமானால் நாடே புற்று நோய்க்குப் பலியாய்விடும்.

எனவே ஜனாதிபதி தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு, பாதிக்கப்பட்ட தமிழ்ப் பிரதேசங்களைப் பார்வையிட்டு, காத்திரமான நடவடிக்கைகளைத் துணிவுடன் எடுக்கமுடியுமானால் நாட்டின் அபிவிருத்தி எவ்விதத்திலும் தடைபடாது.

இனவாதம் தணியவேண்டுமானால் அரசு சார்பு பத்திரிகைகள் தங்கள் குறுகிய 'வாலு'ருவும் பணியைக் கைவிடவேண்டும். தமிழ் மக்களின் விவேகத்தையும் அயரா உழைப்பையும் நாடு மீண்டும் பெறுவதற்கு தேசிய ரீதியில் அவர்களுக்குத் தக்க இடம் வழங்க வேண்டும்.

# சமதர்மஞானி விக்கிரமசிங்கா

[நேற்றைய தொடர்ச்சி]

அமரர் விக்கிரமசிங்கா ஒரு வாழ்க்கைக் காவியம் அவரது வாழ்க்கை வரலாறு, உலகத் தொழிலாளர்களுக்காக அவர் ஆற்றிய தொண்டு, பல நாடுகளின் விடுதலையில் அவர் எடுத்த பங்கு ஆகியனவெல்லாம் அத்தியாயக் கணக்காக எழுதப்படலாம்.

ஆனால் இச்சிறு நினைவஞ்சலியில், எனக்கும் அன்னருக்குமுள்ள உள்ளார்ந்த தொடர்பினைக் கூறுவதும் பொருத்தமாகின்றது.

### 30 ஆண்டுத் தொடர்பு

இப்பெரியாரோடு ஏறக்குறைய 30 ஆண்டுத் தொடர்பு சிறியேனுக்கு உண்டு. இவரது அரசியல் நெறியினால் கவரப்பட்ட நான் "மக்கள் இல்லம்" என்று இந்நாட்டு மக்களால் அழைக்கப்படும் இவரது அக்குரச இல்லத்தில் பல மாதங்கள் வாழ்ந்திருக்கின்றேன். இவரையும் டொறீன் அம்மையாரையும் எனது செவிலிப் பெற்றோர்கள் என்றே கருதிவந்துள்ளேன். இவர்களோடு தங்கியிருந்த வேளையில் அரசியற் பிரசாரக் கூட்டங்களிலும், தொழிற் சங்க வகுப்புகளிலும் பங்குபற்றியுள்ளேன். இக்காலங்களில் என்னை தங்கள் புத்திரனாக 'புஞ்சிப் புத்தா' என்று அழைத்து அமுதூட்டும் பெற்றோர்களாக விளங்கினார்கள்; அரசியல் ஞானமும் வாரிவழங்கினார்கள்.

### அன்று நடந்த கூட்டம்

மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்தில் நான் உதவி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தகாலம் 1950-ம் ஆண்டு. இத்தலைசிறந்த கல்லூரி ஆசிரியர்களுக்கு அளவிட முடியாத சுதந்திரம் கொடுத்திருந்தது. தந்தை விக்கிரமசிங்காவை, ஒரு சிறு பொதுவுடமைக் குழுவினர், மட்டக்களப்புக்கு வரவழைத்தோம். தென்கிழக்கிலங்கையில் மகிழ்ச்சிகரமான பரபரப்பு, மட்டக்களப்பு மைதானத்தில் கூட்டம் நடந்தது.

மக்கள் தலைவனுக்காகஅன்று மட்டக்களப்பு நகரம் விழாக் கோலம் பூண்டது ஏறக்குறைய 5,000 மக்கள் அங்கு குழுமியிருந்தனர். "எனது தமிழ் மக்கள் தலைமைதாங்கும் கூட்டத்தில் சிங்களத் தந்தையாகிய என்னை ஆயிரக்கணக்கான மக்கள் குழுமி வரவேற்கின்றீர்கள்,' இப்பொன்னான நாளில் இந்நாடு சமதர்ம நாடாகத் திகழப் பணிபுரிவோம் எனத் திடசங்கற்பம் செய்வோம்" என்று அவர் கூறியதும் 'அரோகரா' எனும் அன்புக் கோஷம் எழுந்தது.

இத்திருநாளில் எடுக்கப்பட்ட ஆணை நமது தாய் நாட்டில் செயற்பட்டிருக்குமேயானால், இந்நாடு இன்றைய பிற்போக்குச் சக்திகளால் பிளவுபடுத்தப்பட்டு இந்த அவல நிலையை அடைந்திருக்க முடியாது,

### அன்று டாக்டர் கூறியது...

கண்டி மாநகர செஞ்சிலுவைச் சங்கத்தில் சிங்கள மொழியே ஒரு உத்தியோக மொழியாகவும் சிங்கள மொழியே ஒரு போதனமொழியாவும் பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று கொள்ளப்பட்ட காலத்தில் இதை எதிர்க்கும்முகமாகக் கூட்டம் நடைபெற்றது. மாமேதை விக்கிரமசிங்கா அக்கூட்டத்தில் தமிழ் மக்களின் பெருமையினை எடுத்துக்கூறும் முகமாக பாரதத்தில் சிறந்துவிளங்கிய பௌத்த நாலாந்தா பல்கலைக் கழகத்தில் புத்தமித்திரர் எனும் தமிழ் அறிஞர் துணைவேந்தராகவிருந்து இதனை ஒரு உலகப் பல்கலைக்கழகமாக உருவாக்கினர் என்று ஆதாரங்கள் காட்டி எடுத்துரைத்தார் பல முதலாளிவர்க்கக் கொள்கைகளைக்கொண்டிருந்த சிங்கள மக்கள் மேடையில் இருந்தோர் மீது கற்களையும் நாற்காலிகளையும் வீசினர். தலைவர் தலையிலும் கற்கள் விழுந்தன. 'கற்கள் எறியப்படலாம்; இரத்தம் சிந்தப்படலாம்; ஆனால் புத்தமித்திரனார் விட்ட வழி எப்பொழுது இந்நாட்டில் உருவாக்கப்படுமோ அன்று இந்நாடு ஒரு நாடாகத்திகழமுடியும்" என்று தந்தை எடுத்துக் கூறினார்.

கருணையில் வீரம் கண்டவர் அவர்.

சிறுமை கொண்டு சீற்றம் கொள்பவர்கள் ஞானிகள், முனிவர்கள் எனவே இவர் ஞானியாவார்.

### சமரசம் கண்டவர்

அண்ணலார் அவர்கள் பல நெறிகளுக்கிடையில் சமரசம் கண்டவர். தார்க்கீய மார்க்சியமும் தாக நெறியில் எழுந்த கருணை நெறியாம் பௌத்தமும், உண்மை சத்தியம், மக்கள் விமோசனம் ஆகியவற்றில் எழுந்த காந்திய நெறியும் இவரில் சங்கமித்தன.

பௌத்த நெறியைச் செவ்வனே கடைப்பிடித்து பிரம்மோ ஞான சங்கர் தலைவராக விளங்கி பாரத நாட்டில் காந்திய இயக்கத்தில் பெரும் பங்குபற்றி உலகம் போற்றும் உத்தம மார்க்சியவாதியாக விளங்கினார் என்பதைப் பலர் அறிவார்.

வாழ்க்கைச் சமதர்மவாதியான இந்நாட்டு லெனின் அவர்களது மார்க்கமே இந்நாட்டு நோய்களுக்கு அரமருந்தாரம்.

ப. சந்திரசேகரம்
கல்வித்துறை-
யாழ். பல்கலைக்கழகம்)

# மக்கள் கருத்து

### நடவடிக்கை எடுப்பாரா?

வட்டுக்கோட்டைக் கிராம சபையில் வரி மதிப்பீட்டுப் பதிவேடுகள் சரியான முறையில் இல்லை. இதற்கு பலமுறை கடிதங்கள் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் பல இடங்களில் மின்கம்பங்கள் விழும் நிலையில் உள்ளன. யாழ். மாவட்ட சபைத் தலைவர்இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுப்பாரா.

வெ. யோகீஸ்வரன்
வட்டுக்கோட்டை

### அமைச்சர்களுக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். மாநகரசபைக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கும், பிரதி நீதி அமைச்சர் திரு. ஷெல்டன் ரணராஜாவுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைமீது நடைபெற்ற வாக்கெடுப்பில் பங்குபற்றுததையிட்டே, யாழ் மாநகரசபை இரண்டு அமைச்சர்களுக்கும் பாராட்டுத் தெரிவித்துள்ளது. [மா]

### கிருஷ்ணர் ஆலய மகா கும்பாபிஷேகம்

[மாவிட்டபுரம்]

பழம்பெருமையும், பிரசித்தியும் வாய்ந்த கீரிமலை கிருஷ்ணர் ஆலய மகாகும்பாபிஷேக விழா இன்று சிறப்பாக நடைபெறுகிறது. கடந்த 4 தினங்களாக இது தொடர்பான கிரியைகள் இடம்பெற்று இன்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

பிரம்ஸ்ரீ சாமி விசுவநாதக் குருக்கள் தலைமையில் 15க்கு மேற்பட்ட குருமார் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்கள் இசை நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள் ஆகியனவும் இன்று இடம்பெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 தினங்கள் உற்சவம் நடைபெற உள்ளது.

# நாடும் நடப்பும்

இன்னும் ஆறு மாதத்தில் பொதுத்தேர்தல் வருமென்று ஆருடம் கூறுகிறார் ஓர். அரசியல் அவதானி.

ஜனாதிபதி ஜே. ஆருக்கும் கூட்டணித் தலைவர்களுக்குமிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளும் உடன்படிக்கையும் நாட்டில் அமைதியையும் பாதுகாப்பையும் ஏற்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும்பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள் தோன்றியுள்ள பிளவும் பொதுத்தேர்தல் வருவதற்கு நல்லதொரு வாய்ப்பு என்று விளக்கம் தந்தார் அவர்.

மாவட்ட அபிவிருத்திச்சபைகள் விரிவுபடுத்தப்படலாமென்றும் இவை பிரதேச சுயாட்சிக்கு வழிவகுக்கக்கூடிய முறையில் மாற்றியமைக்கக் கூடுமென்றும் தெரிவித்த அந்த அரசியல் அவதானி பிரதேச சுயாட்சி முறையை பல அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டுள்ளன என்றும் விளக்கம் கூறினார்.

நடப்பதெல்லாம் நன்மைக்கே!

ஃ ஃ ஃ

கவியரசு கண்ணதாசன் அமெரிக்காவில் திடீரென நோய்வாய்ப்பட்டு இடபோது அங்கேயே சிகிச்சை பெற்று வருகிறார். அவரது வைத்தியச் செலவை தமிழக அரசே பொறுப்பேற்றிருக்கிறது. தமிழ்நாடு ஆஸ்தான கவிஞரான கண்ணதாசன் அமெரிக்காவில் டெட்டாயிட் நகரில் நடந்த கவிதை விழாவில் கலந்துகொள்ளச் சென்றிருந்தார். "பயணத்தின் போதே எழுதுகிறேன்" என்று தமது பிரயாண அனுபவத்தைச் சுமுகத்தில் எழுதிக்கொண்டிருந்தார் தம்மை அமெரிக்காவில் வைத்திய நிபுணர்கள் பரிசோதித்தது பற்றியும் அவர் தமது கட்டுரையில் எழுதியிருந்தார் திடீரென்று நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்தி அனுமதிக்கப்பட்டதாக வந்த செய்தி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது

கவியரசு ஒரு காப்பியம் படைத்துக்கொண்டிருப்பதாக முன்னர் ஒரு தடவை கூறியிருந்தார். அதை அவர் நிறைவேற்றி அரங்கேற்றமும் செய்வதற்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும்.

ஊர்சுற்றி

ஜனாதிபதி அலிரஜாய் பிரதமர் பஹோனேர் மரணத்தையடுத்து

# ஈரானில் தொடர்ந்தும் வன் செயல்கள்!

## தலைவர்கள் பலர் படுகொலை

தெஹ்ரான், செப். 2 ஈரானியப்பிரதமரும் ஜனாதிபதியும் படுகொலை செய்யப்பட்டதையடுத்து அங்கு ஏற்பட்ட அரசியல் வன்செயல்களின்போது நீதிபரசர், சமயத் தலைவர், படைவீரர் உட்பட்ட பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

வீதியில் ஓடிக்கொண்டிருந்த காரில் சென்ற சிலர் வீதியில் நின்ற ஒருவரின் துப்பாக்கிக்குப் பலியானார்களென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரான் நகரின் ஒதுக்குப்புறத்தில் குண்டுவெடிப்புச் சம்பவத்தின் போது இருவர் கொலைப்பட்டனரென்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## கூட்டங்கள் ஊர்வலங்களுக்கு தடை

சென்னை, செப். 2 சென்னைநகரில் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத் தடையுத்தரவு நேற்றுமுதல் 15 நாட்களுக்கு அமுலிலிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## விடுதலைசெய்ய கோரிக்கை

புதுடில்லி, செப். 2 இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஆதரவாக சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்த தி. மு. க. வினர் கைது செய்யப்பட்டு காவலில் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளவிஷயம் குறித்து ராஜ்ய சபையில் தி. மு. க. எம். பி. ஒருவர் நேற்றுப் புகார் செய்தார்.

தி.மு.க. தமிழக சட்டசபை உறுப்பினர் இருவர் உட்பட காவலில் வைக்கப்பட்டுள்ள 200 பேரையும் உடன் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் அவர் சபையில் வேண்டுகோள் விடுத்தார். (இ)

## வெற்றிதோல்வி இல்லை

லண்டன், செப். 2 இங்கிலாந்திற்கும் அவுஸ்திரேலியாவிற்குமிடையே நடைபெற்ற 6வது டெஸ்ட் தொடர் நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஆறு டெஸ்ட் தொடர்களில் இங்கிலாந்து மூன்று டெஸ்ட்களிலும், அவுஸ்திரேலியா ஒரு டெஸ்ட்டிலும் வெற்றி பெற்றது. இரண்டு டெஸ்ட்கள் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன.

## அங்கோலாவில் சோவியத் அதிகாரிகள் கொலை?

### தென்னாபிரிக்கா கூறுகிறது

லிஸ்பன், செப். 2 அங்கோலாவில் தென்னாபிரிக்க துருப்புக்களுக்கும், அங்கோலா துருப்புக்களுக்குமிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தின்போது ரஷ்ய இராணுவ வீரரொருவரும் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இவ்யுத்தத்தின்போது பல சோவியத் அதிகாரிகள் கொல்லப்பட்டதாகவும் தென்னாபிரிக்கா தெரிவித்துள்ளது.

சோவியத்யூனியன் அங்கோலாவிற்கு துருப்புக்களை அனுப்பவில்லையென்று தெரிவித்துள்ளதால், சோவியத் அதிகாரிகளின் மரணம் குறித்துக்கருத்துத் தெரிவிப்பது சோவியத் தலைவர்களுக்குச் சங்கடமாகவுள்ளது.

அங்கோலாவின் பல பகுதிகளிலும் கண்ணிகள் புதைக்கப்பட்டிருப்பதால் தென்னாபிரிக்க துருப்புக்கள் அங்கிருந்து இலகுவில் வெளியேற முடியாத நிலையிலுள்ளதாகக் கூறப்படுகிறது. (வெ)

# 'தாய்நாட்டின்விடுதலைக்காக பாடுபட்டவர்!'

## விக்கிரமசிங்கா மறைவுக்கு சோவியத்யூனியன் அஞ்சலி

மாஸ்கோ, செப். 1 "அரை நூற்றாண்டு காலமாக தமது தாய்நாட்டின் விடுதலைக்காகவும் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க அவரது மறைவுகுறித்து சோவியத் யூனியன் ஆழ்ந்த கவலைதெரிவிக்கிறது"

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் தலைவர் டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்காவின் மறைவுகுறித்து சோவியத் யூனியன் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

சிறந்த சர்வதேச தொழிற்சங்கத்தலைவர்களில் ஒருவராக டாக்டர் விக்கிரமசிங்கா விளங்கினார் என்றும் அந்த அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## லோகசபையில் அமளிதுமளி

புதுடில்லி, செப். 2 மஹாராஷ்டிர முதல்வர் ஜனாப் ஏ. ஆர். அந்துலே பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் பெயரில் சட்டவிரோதமாக நிதி சேகரித்தார் என்ற குற்றச்சாட்டுகள் குறித்து லோகசபையில் விவாதிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் வற்புறுத்தியதையடுத்து நேற்று சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

எதிர்க்கட்சியினர் சபையில் காரசாரமாக வாதிட்டதுடன் துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தனர்.

சபையில் கூச்சலும் குழப்பமும் சுமார் 15 நிமிடங்கள் நீடித்தன என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பாடசாலையில் திருட்டு

(மன்னார்)

பேசாலை - தள்ளுர்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஒடுபிரித்து 1500 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஃ)

## ஜனாதிபதியும் பாரியாரும் சனிக்கிழமை சவூதி பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும், திருமதி ஜெயவர்த்தனவும் இம்மாதம் 5-ம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சவூதி அரேபியாவுக்குச் செல்கின்றனர்.

சவூதி அரேபிய மன்னர் காலித்தின் அழைப்பை ஏற்றே ஜனாதிபதியும், பாரியாரும் அங்கு விஜயம்செய்கின்றனர்.

இவர்கள் இம்மாதம் 10-ம் திகதி நாடு திரும்புவார்கள். ஜனாதிபதியின் விஜயத்திற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல்லும் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மதும் ஏற்கனவே சவூதி அரேபியா சென்றுள்ளமை தெரிந்ததே. (வெ)

## கல்லூரியில் திருட்டு

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் இரவுவேளையில் ஒட்டைப்பிரித்து அதிபர் அறையில் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த மணிக்கூடு உட்பட பல பெறுமதிமிக்க பொருட்களையும் ரொக்கப் பணத்தையும் திருடிச்சென்றுள்ளனர்.

திருட்டுச்சம்பவம் பற்றி கல்லூரி அதிபர் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஃ)

## உற்சவம் ஆரம்பம்

(வேலணை)

வேலணை இலந்தைவனம் அருள்மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. இம்மாதம் 10ம் தேதி தேர்த்திருவிழாவும், 11 திகதி தீர்த்தோற்சவ விழாவும் நடைபெறும். (ஃ)

"அத்துமீறல் நடைபெற்றால்

## அமெரிக்க படைகளின் மீது தாக்குதல் நடத்தப்படும்"

### கேணல் கடாபி எச்சரிக்கை

திரிப்போலி, செப். 2 "மத்தியதரைக் கடலிலுள்ள அமெரிக்கப் படைகளின்மீது அவசியம் ஏற்படும் பட்சத்தில் தாக்குதல் நடத்தப்படும்"

மேற்கண்டவாறு லிபியா அதிபர் கேணல் கடாபி தமது ஆட்சியின் 12-வது நிறைவுவிழாவைக் கொண்டாடுமுகமாக திரிப்போலியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

'மத்தியதரைக்கடல் பிராந்தியத்திலுள்ள இத்தாலிய நாடுகளில் அமெரிக்கா அத்துமீறிப்பிரவேசித்தால் அங்குள்ள அமெரிக்கத் துருப்புக்கள் மீது லிபியா தாக்குதலை மேற்கொண்டுள்ளதயங்காது

"மத்தியதரைக்கடல் பிராந்தியத்தின்மேல் பறந்த இரண்டு லிபிய விமானங்களை அண்மையில் அமெரிக்கா சுட்டுவீழ்த்தியதற்கும் கேணல் கடாபி கண்டனம் தெரிவித்தார்.

"லிபியா மீது அமெரிக்கா தாக்குதலை மேற்கொண்டால் லிபியாவும் எதிர்த்தாக்குதலை மேற்கொள்ளும்" என்றார். (வெ)

## சென்னையில் வி. என். வெளியிட்டகருத்து

சென்னை, செப். 2 "இலங்கையில் தமிழர்களை பாதுகாக்க அரசாங்கத்தினால் முடியாவிட்டால் அவர்களை தமிழ்மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளுக்கு அனுப்பி விடவேண்டும்"

மேற்கண்டவாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சென்னையில் நிருபர்கள் மத்தியில் உரையாற்றுகையில் கூறினார்.

புதுடில்லி சென்று இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியைச் சந்திக்கப் போவதாகவும் திரு. நவரத்தினம் நிருபர்களிடம் தெரிவித்தார்.

தமிழ்நாடு அமைச்சர்களான திரு. ஆர். நெடுஞ்செழியன், திரு. எஸ். பி. சோமசுந்தரம், ஆகியோரையும், தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதியையும் சந்தித்து இலங்கை நிலைமைகள்பற்றி திரு. நவரத்தினம் அவர்களுக்கு விளக்கினார். (வெ)

## வறிய நாடுகளுக்கு உதவ வேண்டும்

நியூயோர்க், செப். 2 உலகின் வறிய நாடுகளுக்கு உதவ உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமென்று ஐ. நா. பொதுச்செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் தெரிவித்துள்ளார். (வெ)

தோ. தொழிலாளருக்கென

# வீடமைப்புத்திட்டம் அமைத்து வழங்குக!

## யாழ். மாநகரசபை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

தொகுதிதோறும் வீடமைப்புத் திட்டங்களில் மலையகத் தோட்டத் தமிழ்மக்கள் புறக்கணிக்கப்படுவதாகக் கண்டித்து யாழ் மாநகரசபையால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திரு. எம். அலோசியஸ் கொண்டுவந்த இத்தீர்மானத்தின் விபரம் வருமாறு.

"தொகுதிதோறும் வீட்டுத் திட்டங்கள் அமைத்து ஏழை மக்களுக்கு விநியோகித்து உதவும் திட்டத்தின் கீழ் இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாகவும், கொடிய துன்பங்களுக்கும் ஆளாகி சேவை செய்துவரும் மலையகத் தோட்டத் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவதை இச்சபை வன்மையாகக் கண்டிக்கிறது. அண்மையில் பதுளையில் மேற்கொள்ளப்பட்ட வீட்டுத்திட்டத்தில் தோட்டத் தமிழ்மக்களில் ஒருவருக்குத் தானும் முன்னுரிமை வழங்கப்படாமை குறித்தும் இச்சபை விசனத்துடன் கண்டனம் தெரிவித்து நிற்கிறது.

"இந்நாட்டின் வளர்ச்சியில் 175 ஆண்டுகாலமாக ஈடுபட்டு வரும் மலையகத் தமிழ்மக்கள், ஆதிகாலின் தற்காலிக முகாம் போன்ற சிறிய வீடுகளில் கூனிக் குறுகி சீவியம் நடத்தும் நிலைமாற உடனடியாக இவ் ஏழைத் தொழிலாளருக்கு எனத் தனிவீட்டுத் திட்டமமைத்து விநியோகிக்கும்படி பிரதமரை இச்சபை கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கிறது" (மா)

வெலிங்டன் தினசரி 2-30, 6-30
திசைமாறிய பறவைகள்

நாகம்ஸ் (கல்முனை) தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - விஜயகுமாரி
கொடிமலர்

7-வது வெற்றி வாரம்
ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு-ஷோபா
நூல் வேலி (கலர்)


# சிறுவனின் சடலம்

(மன்னார்)

காட்டினுள் விறகு எடுக்கச் சென்ற பெற்றோரைத் தேடிச் சென்ற 4 வயது சிறுவனின் சடலம் காட்டிற்குள் கண்டெடுக்கப்பட்டது.

மடுமாதா ஆலய உற்சவத்தில் கலந்துகொள்ள வந்தவர்கள் மடுவில் வீதியின் அருகே தாம்வந்த வாகனத்தை நிறுத்திவிட்டு அதில் 4 வயதுச் சிறுவனை இருக்கச் செய்துவிட்டு காட்டினுள் விறகு எடுக்கச் சென்றுவிட்டனர்.

விறகு எடுத்துக்கொண்டு வாகனம் நின்ற இடத்திற்கு வந்த பெற்றோர்கள் பிள்ளையைக் காணாது தேடினர். தொடர்ந்து 4 நாட்கள் நடைபெற்ற தேடுதலையடுத்து மடுவிலிருந்து 5 மைல் தூரத்தில் சிறுவன் சடலம் காணப்பட்டது. (அ)



அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் கடந்த ஆனி மாதம் 5-ம் திகதி நடைபெற்றபோது பிரதான ஸ்தூபிக்கு பிரதமகுரு சிவஸ்ரீ இ. சுப்பிரமணியக்குருக்கள் தலைமையில் அபிஷேகம் நடைபெறுவதைப் படத்தில் காணலாம். இவ்வாலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பமாகின்றது. 12ம் திகதி தேர்த்திருவிழாவும், 13ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும்.

வெலிங்டன் தினசரி 4 காட்சி
BEYOND THE POSEIDON ADVENTURE

வின்சர் தினசரி 4 காட்சிகள்
அலாவுதீனும் அற்புதவிளக்கும்

சாந்தி (யாழ் நகர்) 10-30, 2-30, 6-00 & 9-45
சிவாஜி - எஸ். எஸ். ஆர். - நாகேஷ் பத்மினி-எம். என். ராஜம்.
'தெய்வப் பிறவி'
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

கடைசி வாரம்
(யாழ்ப்பாணம்)
ராஜா தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
எம். ஜி. ஆர். லதா
பல்லாண்டு வாழ்க (ஈஸ்ட்மன் கலர்)

3 வது வாரம்
ஒருபெண்ணுக்கு துணிவு இருந்தால்மட்டும் போதாது துணையும் வேண்டும் என்பதை சித்தரிக்கும் சித்திரம்தான்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
★ காமினி ★ ஸ்ரீபிரியா ★ ராதாரவி ★ தேங்காய் ★ நம்பியார் நடித்த
நீலக்கடலின் ஓரத்திலே (ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
★ சுதாகர் ★ பாக்கியராஜ் ★ சுமதி மற்றும் பலர் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

ஸ்ரீதர் (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
மஞ்சுபார்கவி — துளசிராம்
சங்கராபரணம் (கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர்-லக்ஷ்மி
கனிமுத்து பாப்பா

## நிரந்தர கட்டடம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பிரசின் பற்றுக் கிளைச் சங்கத்திற்கு 40 ஆயிரம்ரூபா செலவில் புதிய நிரந்தரக் கட்டடம் நிறுவப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் சங்கத் தலைவர் ஆசிரியர் செ. இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற விசேட பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (அ)

## திருப்பணிவேலை ஆரம்பம்

[சாவகச்சேரி]

கொடிகாமம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன்கோவில் திருப்பணி வேலைகளுக்கான அடிக்கல்லை பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் நேற்றுமுன் தினம் நாட்டிவைத்தார். (அ)

# எழுதுமட்டுவாள் பகுதிக்கு மாவட்ட அமைச்சர் திடீர்விஜயம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த எழுதுமட்டுவாள் பகுதிக்கு யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயகோன் நேற்று முன்தினம் திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இவருடன் செயலாளர் திரு. எஸ். பி பாலசிங்கம் உட்பட பல அதிகாரிகளும் சென்றனர்.

ஜூன்மாதம் 12, 13, 14ம் திகதிகளிலும் ஜூலை 20ம் திகதியும் எழுதுமட்டுவாள் பகுதியில் இடம்பெற்ற சாதிக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவும், சம்பந்தப்பட்ட மக்களைச் சந்திக்கவுமே மாவட்ட அமைச்சர் சென்றதாகக் கூறப்படுகிறது.

இப்பிரச்னை சம்பந்தமாக யாழ். மாவட்ட ஐ. தே. க. உறுப்பினர் சி. இ. குணரத்தினம், சி. த. ஐ. மு. செயலாளர் திரு. எம். எஸ். அலெக்ஸாண்டர் ஆகியோரடங்கிய குழு ஒன்று ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஐ. தே. கட்சி எம். பி.க்களுக்கு விரிவான மகஜர் ஒன்றை ஜூலை மாதம் 28ம் திகதி நேரில் கையளித்து விளக்கினர்.

இம்மகஜரில் பாதிக்கப்பட்ட 400 பேர் அகதிகளாக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

## இளைஞர்களுக்கு தஞ்சம் அளித்த மே. ஜெர்மன், பிரான்ஸ் நாடுகளுக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"தமிழ் இளைஞர்களுக்கு அரசியல் புகலிடம் அளிக்கும் உத்தேசம் காரணமாக அவர்களை அங்கிருந்து நாடு கடத்துவதில்லை என்று முடிவுசெய்தமைக்காக மேற்கு ஜெர்மனி பிரெஞ்சு நாட்டு அரசாங்கங்களை மேற்படி மனிதாபிமான முடிவுக்காகப் பாராட்டுவதென்று யாழ். மாநகரசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவநாதனால் தாக்கல்செய்யப்பட்ட இப்பிரேரணை சபையில் ஏகமனதாக நிறைவேறியுள்ளது. [மா]



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற இலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பெற்ற விளையாட்டுத்துறைக்கான "டிப்ளோமா" பரீட்சையில் செல்வி அன்ரனெட் புளோறன்ஸ் மைக்கல்பிள்ளை சித்தி அடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மைக்கல்பிள்ளையின் மூத்த புதல்வியான இவர் யாழ். திருக்குடும்ப ஆங்கில பாடசாலையின் பழைய மாணவியாவார், மாணவ காலத்திலேயே வலைப்பந்தாட்டத்தில் சிறந்து விளங்கி தங்கப்பதக்கம் ஒன்றையும் தட்டிக் கொண்டார். மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் விளையாட்டுத்துறை உத்தியோகத்தராக சேவையாற்றியுள்ள இவர் தற்போது மேல்மாகாண உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டுத்துறை உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார்.

# தம்பி வீட்டில் அண்ணன் திருட்டு

[மாவிட்டபுரம்]

முதல்நாள் திருட்டு மறுநாளே துப்புத் துலங்கியது. திருட்டுப்பொருளுடன் கைதானவர் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

பன்னாலை வரத்தலம் என்னுமிடத்தைச் சேர்ந்த இளையதம்பி ஐயர் நடேச இரத்தினசர்மாவின் 1200 ரூபா பெறுமதியான விவசாய தெளிகருவி, அவர் யாழ்ப்பாணம் சென்றிருந்த சமயம் வீட்டின் கதவு ஓடுகள் பிரிக்கப்பட்டு களவாடப்பட்டிருந்ததாக மகேசன்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இம்முறைப்பாட்டில் தமது அண்ணனை இளையதம்பி ஐயர் ஆனந்தஇரத்தினசர்மாவை இத்திருட்டுக் குறித்து சந்தேகிப்பதாக முறைப்பாட்டுக்காரர் தெரிவித்திருந்தார்.

கடத்தல் மிகக்கட்டுப்பாடான இத்திருட்டுக்குறித்து உடன் விசாரணை செய்த காங்கேசன்துறைப் பொலிசார் மறுநாளே மேற்படி தெளிகருவியை மீட்டதுடன் சந்தேகத்தின்பேரில் முறைப்பாட்டாளரின் அண்ணனான சிவானந்தஐயர் ஆனந்தஇரத்தினசர்மாவை கைது செய்து பொலிஸ் காவலில் வைத்துள்ளனர்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## மீண்டும் தெரிவு

(பண்டத்தரிப்பு)

வடமராட்சி கல்லூரி அதிபர்கள் சங்கத்தின் தலைவராக சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே. அருணாசலம் மீண்டும் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (அ)

### கம்பர்மலை துப்பாக்கிச்சூடு:

## ஆறுபேரின் வாக்குமூலம் மறியற்சாலையில் பதிவு

[புலோலி]

கம்பர்மலையில் அறுவரைப் பலிகொண்ட பயங்கர துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தின் சந்தேகநபர்கள் அறுவரின் வாக்குமூலங்களை வல்வெட்டித்துறைப் பொலிசார் யாழ். மறியற்சாலையில் வைத்துப் பதிவுசெய்தனர்.

வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே உடுகம்பொல, இப்பயங்கர துப்பாக்கிச்சூட்டுச்சந்தேகநபர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்கு அனுமதியளிக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்திருந்தார்.

நீதவான் திரு. கே. எஸ். மகேசன் சந்தேகநபர்களின் வாக்குமூலங்களைப் பதிவுசெய்வதற்கு அனுமதியளித்ததைத் தொடர்ந்து சந்தேகநபர்களான இ. தேவராசா, இ. தங்கராசா, சி. தில்லைநடராசா, இ. அப்புத்துரை, வே. மகேந்திரன், இ. துரைராசா ஆகிய அறுவரினதும் வாக்குமூலங்களை வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. உடுகம்பொல, சார்ஜண்ட் இராசையா, கான்ஸ்டபிள்களான ஏ. ஏ. யோகராசா, கே. பொன்னையா ஆகியோர் யாழ். மறியற்சாலையில் வைத்து விசாரணைசெய்து பதிவுசெய்தனர்.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயங்களுக்குள்ளாகி மயிரிழையில் உயிர்தப்பிய இளம் பெண்ணான நாராயணசாமி காஞ்சனுவதி தொடர்ந்தும் யாழ். பெரியாஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

### உதவித்திட்டம் அங்குரார்ப்பணம்

[புலோலி]

ஊனமுற்றோர் திட்டமொன்று அல்வாயில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. கே. வி. தங்கராசா தலைமையில் இம்மாதம் 5ம் திகதி இவ் ஊனமுற்றோர் உதவித்திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் கழக ஆணையாளர் திரு பீ. இராசையா யாழ். மாநகர சபை உறுப்பினர் திருமதி அந்தோனியார் சுவாமி நாதர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ள இவ்வைபவத்தில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் கழகத் முதலுவிதச்சிகிச்சைப்பயிற்சிச் சான்றிதழ்களும் இளைஞர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பொதுக்கிணறுக்கு நிதி ஒதுக்கீடு

[பச்சிலைப்பள்ளி]

பளைப்பகுதியிலுள் பேராலை என்னுமிடத்தில் பொதுக்கிணறு அமைப்பதற்கு 5,350 ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் அப்பகுதிகளிலுள்ள பொதுக் கிணறுகளின் திருத்த வேலைகளுக்கும் 3 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. [க]

### துன்னாலை வாலிபர் கொலை:

## சந்தேக நபர்கள் மீது வழக்குத் தாக்கல்

[புலோலி நிருபர்]

துன்னாலை வாலிபர் இராசகோபால கொலைச்சந்தேகநபர்களுக்கெதிராகப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த மே மாதம் 18ந் திகதிக்கும் 19ம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் துன்னாலை வடக்கைச் சேர்ந்த இராசா இராசகோபால் [யப்பான்] என்பவர் துன்னாலை அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் கொலைசெய்யப்பட்டு இளக்கயிறு ஒன்றில் தூக்கப்பட்டிருந்தசம்பவம் தொடர்பாக சந்தேகத்தின்பேரில் சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம், மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவேலு சரவணசிவா ஆகிய மூவரும் பருத்தித்துறைப் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். 1ம் எதிரியான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் யாழ் மேல்நீதிமன்றத்தினால் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இக்கொலை வழக்குச் சந்தேகநபர்கள் மூவரும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் மீண்டும் ஆஜர்செய்யப்பட்டனர்.

பொலிசார் இச்சந்தேகநபர்களுக்கெதிராகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றத்தில் இவர்களுக்கெதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு வாசித்துக் காட்டப்பட்டதைத் தொடர்ந்து இக்கொலை வழக்கு விசாரணையை 10-9-81ம் திகதிக்கு ஒத்திவைத்த நீதவான் 2ம், 3ம் எதிரிகளைத் தொடர்ந்தும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பொலிசார் சார்பில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் கான்ஸ்டபிள் டேவிட்டும், வழக்காளி சார்பில் சட்டத்தரணிகளான எம். சோமசுந்தரம், எஸ். சிவஞானசுந்தரம் [காண்டீபன்] செல்வி விஜயராணி மகாதேவாவும் ஆஜராகி இருந்தனர். [அ]

### கொள்ளையர் கைது

[அநுராதபுரம்]

தேடப்பட்டுவந்த பயங்கர கொள்ளைக்காரர்கள் ஆறு பேரை அநுராதபுரம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அநுராதபுரம கஹட்டகஸ்டிகிரிய, போன்ற பகுதிகளில் பெரும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டிருந்த இக்கோஷ்டியினர் காடொன்றினுள் ஒலிந்திருக்கையிலேயே பொலிஸாரின் வலைகளில் சிக்குண்டனர்.

இவர்களைக் கைது செய்த பொலிஸார் இவர்களிடமிருந்து ஒரு துப்பாக்கி, வாள், கத்தி, கிறிஸ்கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களையும் கைப்பற்றியுள்ளனர். இக்கோஷ்டியினரின் தலைவன் முன்பு கைதாகி விடுதலை பெற்ற பயங்கரவாதி என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

### ஈரானின் புதிய பிரதமர்

தெஹ்ரான், செப். 2

ஈரானின் புதிய பிரதமமந்திரியாக ஜனாப் முகம்மட் ரெயிஸா மஸ்தபிஹரான் ஈரானிய பாராளுமன்றத்தால் நியமிக்கப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டது.

இவர் ஈரானின் இடைக்கால அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகப் பதவி வகித்தவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தெஹ்ரானில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் ஈரானின் பிரதமரும், ஜனாதிபதியும் கொல்லப்பட்டது தெரிந்ததே.

[வெ]

### நாட்டின்—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் வங்கியில் கடன்படுவதையிட்டு வெட்கப்படக் கூடாது என்றார்.

"மக்கள் வங்கிகளில் கடனாக எடுக்கும் பணத்தை பல்வேறு அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த வேண்டும்" என்றும் அமைச்சர் சொன்னார்.

மாவட்ட அமைச்சர் மேலும் பேசுகையில்

"கிராமப்புறங்களில் வசிக்கும் மக்கள் கூட வங்கிகளை நாடிச் செல்லத் தொடங்கியுள்ளனர். அவர்களின் நன்மை கருதி இதுபோன்ற வங்கிக் கிளைகளை அமைக்கத்தொடங்கியுள்ளோம். யாழ்ப்பாணத்தில் 20-வது கிளையாகவும், நகரில் 4வது கிளையாகவும் இவ் வங்கி திறக்கப்பட்டுள்ளது.

"வங்கிகளின் முக்கிய கடமை வைப்பு ஏற்பது கடன் வழங்குவதாகும். நாட்டின் மாவட்ட அமைச்சர் அபிவிருத்திக்கு மக்கள் பாடுபடவேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

மக்கள் வங்கி வடபிராந்திய முகாமையாளர்திரு என். எஸ். பி. ஆனந்தன், உதவி முகாமையாளர் திரு. வி. ராஜேந்திரா ஆகியோரும் உரையாற்றினர்.

கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் திரு. ஏ. அம்பலவாணர் நன்றிகூறினார்.

யாழ். அரசாங்க செயலக அதிகாரிகளும் இக்கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். [மா]

### முதல்கணக்கை ஆரம்பித்தார்

[யாழ்ப்பாணம்]

கன்னாதிட்டி மக்கள் வங்கி கிளை நேற்றுத் திறக்கப்பட்ட போது, தொழிலதிபர் திரு. த. முருகமூர்த்தி முதல்வைப்பாக 50 ஆயிரம் ரூபாவை, யாழ். மாவட்ட அமைச்சரிடம் கொடுத்து கணக்கை ஆரம்பித்தார்.

தொடர்ந்து பலர் தங்கள் வங்கிக்கணக்கை ஆரம்பிக்கத் தொடங்கினார்கள், மாவட்ட அமைச்சர் இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததுடன், பணம் வைப்பு செய்தவர்களை கண்டு பாராட்டுத் தெரிவித்தார். [மா]

### ஏற்றுமதி இறக்குமதிக்கும் சேவை புரியும்

[யாழ்ப்பாணம்]

வெளிநாட்டு வர்த்தக ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் கன்னாதிட்டி மக்கள் வங்கிக்கிளை சேவைபுரியவுள்ளது. இத்தகவலை மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் திரு என். எஸ். பி. ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இவ் வங்கிக்கிளை யாழ்ப்பாண மக்களின் நன்மை கருதி சர்வதேசப் பிரிவாகவும் சிறிது காலத்துக்குப் பின்பு இயங்கும் எனவும அவர் உறுதி அளித்தார். (மா]

## இப்படியும் நடக்கிறது

போதைப் பொருள்களுக்கு அடிமைப்பட்டவர்கள் உங்கள் அருகில் வந்தால் ஜாக்கிரதையாக இருந்துகொள்ளுங்கள்!

இந்தியாவின் வடமாநிலமான உத்தரப் பிரதேசத்திலுள்ள ப்பைஸாபாத் எனுமிடத்தைச் சேர்ந்த நடுத்தர வயதுள்ள ஒருவர் போதைப் பொருள்களை "சாப்பிட்டு" விட்டு நல்ல மயக்கத்தில் படுக்கைக்குச் சென்றுவிட்டார்.

இவரைப் பலி கொள்ளவோ அல்லது இவருடன் துயில் கொள்ளவோ தெரியவில்லை............ ஒரு நச்சுப்பாம்பு இவரைத் தீண்டிவிட்டு போதாக் குறைக்கு அவரது காலை விடாப்பிடியாகச் சுற்றிக்கொண்டு விட்டது!

நிலைமையை அவதானித்த சிலர், துடியாய்த் துடித்துக் கொண்டே பாம்பை ஒருபடியாக அப்புறப்படுத்தினர்.

என்ன ஆச்சரியம்! பாம்பு மிகவும் கஷ்டப்பட்டு செத்துக் கொண்டிருந்தது! அந்த நபரிடமிருந்து பாம்பு முழுமையாக அப்புறப்படுத்தப்பட்டபோது அது செத்து விட்டது!

போதைப் பொருள் சாப்பிடுபவர்கள் பாம்பு விஷத்தையும் மிஞ்சி விட்டார்கள்!

— ஊடுருவி

## துணி விற்பனை செய்தும் பணம் வரவில்லையாம்

[யாழ்ப்பாணம்]

மின் தறித் துணி வகைகள் விற்பனைக்குச்சென்றவர்கள் விற்பனைப்பணத்தை உரிய இடத்தில் சேர்க்கத் தவறியதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்து இவ் விவகாரம் பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது.

சங்கானை பகுதியிலுள்ளள ஒ. ந. ப. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த மின்தறி ஆலைக்குச் சொந்தமான துணிவகைகளை மலைநாட்டுப்பகுதிக்கு விற்பனைக்காகக் கொண்டு சென்றவர்கள் அதற்கான பணத்தை உரிய இடத்தில் சேர்க்கவில்லையாம், இதுபற்றிய முறைப்பாட்டையடுத்து விசாரணையில் இறங்கிய அதிகாரிகள் விற்பனை செய்யப்பட்டதுணிகளைக் கொள்முதல் செய்தவர்கள் அதற்கான பணத்தைத் தாம் சங்கத்தின் விற்பனைப்பிரதிநிதிகளிடம்செலுத்தி விட்டதாகத் தெரிவித்துள்ளனராம்.

இதே பிரதிநிதிகள் முன்னரும் துணி விற்பனையில் தவறுகள் செய்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிளைச்சங்கப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் இது சம்பந்தமாகத் தகுந்த நடடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுள்ளனர்.

## இருந்துபலனில்லை எனகூறி கிருமிநாசினி அருந்தினாராம்

[யாழ்ப்பாணம்]

மனவிரக்தி காரணமாக மூன்று பிள்ளைகளின் தந்தை கிருமிநாசினி அருந்தி நேற்று தற்கொலை செய்து கொண்டார்,

கொக்குவிலைச் சேர்ந்த க. குணபாலசிங்கம் [35 வயது) என்பவரே தற்கொலை செய்து கொண்டவராகும்,

இவரது மரணம் குறித்து மரணவிசாரணை அதிகாரியும் பதில் நீதவானுமான திரு. எஸ். அமிர்தலிங்கம் விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது; இவர் புகையிலை வியாபாரம் செய்பவர் என்றும் வியாபாரத்தில் அதிகளவு நஷ்டம் ஏற்பட்டதென்றும், இதுகுறித்து அவர் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தார் என்றும், சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்தார் என்றும் சிறுநீர் கழிப்பதில் இவர் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

"உயிருடன் இருந்து பலன் இல்லை" என்று கூறிக்கொண்டே அவர் கிருமிநாசினியை அருந்தியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

### ஆஸ்பத்திரியில் பத்திரங்கள் தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் குழந்தைகள் பிறப்புப் பத்திரத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது இதனால் குழந்தை பிறந்து ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறும்போது பிறப்புப் பதிவுப்பத்திரத்துக்குப் பதிலாக 'பேபிகார்ட்' வழங்கப்படுகிறதாம்,

இப்பத்திரத் தட்டுப்பாட்டால் அதிக தூரங்களிலிருந்து வரும் கிராம மக்கள் பெரும் சிரமத்துக்குள்ளாவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா

### மலையகத் தொழிலளாருக்கு அரசு நிதி

[கொழும்பு]

அண்மையில் நிகழ்ந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் புனர் வாழ்வுக்கென அரசாங்கத்தினால் விசேட நிதி ஒன்று ஆரம்பிக்கப்பட விருக்கிறது

இந் நிதிக்கு சகல தோட்டத்தொழிலாளர்களின் ஒரு நாள் சம்பளத்தை அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

### மோட்டார் சைக்கிள் கழுதையுடன் மோதி இருவர் காயம்

[மன்னார்]

மோட்டார் சைக்கிள் கழுதையுடன் மோதியதையடுத்து பலத்த காயங்களுக்குள்ளான இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் 4வது மைலில் இடம்பெற்ற இவ் விபத்தில் காயமடைந்த இருவரில் ஒருவர் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது,

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 203ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 3-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.